விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 02 சனிக்கிழமை (16.06.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 178






## நயினையில் இன்று கொடியேற்றம்

நயினை நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த திருவிழா இன்று நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் 29 ஆம் திகதி காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறு நாள் காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

## அரசு-புலிகளை பேச்சுக்கு அழைக்க இணைத்தலைமை நாடுகள் ஆராயும்

(கொழும்பு)

மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வருவதற்கு உள்ள சாத்தியமான அனைத்து வழிகள் குறித்தும் இணைத் தலைமை நாடுகள் தீவிரமாக பரிசீலனை செய்யவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.


நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் இம் மாதம் 25,26 ஆம் திகதிகளில் இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டம் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் அனுசரணையாளரான நோர்வேயின் சார்பில் அதன் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல் (06 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வே தூதுக்குழுவினருடன் ஜனாதிபதி ஜெனீவாவில் பேச்சு

## அமைச்சர் டக்ளஸூம் பங்கேற்பு

(ஜெனீவா)

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல் ஹெய்ம் மற்றும் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் ஆகியோரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று ஜெனீவாவில் சந்தித்துப் பேசினார். இச் சந்திப்பில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது குறித்து பேசப்பட்டதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (06 ஆம் பக்கம் பார்க்க)



## சட்டமா அதிபர் அலுவலகத்தின் தலையீட்டால் மனித உரிமை மீறல் விசாரணை தோல்வியடையும்

### சர்வதேச விசாரணைக்குழு கவலை

இலங்கையில் இடம் பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் குறித்த இலங்கை அரசாங்கத்தின் புலனாய்வு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக அமைக்கப்பட்ட சர்வதேச கண்காணிப்பாளர் குழு இப் புலனாய்வு நடவடிக்கையில் மாற்றம் செய்யப்படா விட்டால் அது தோல்வியில் முடிபடைய நேரிடும் என்று எச்சரித்துள்ளது.

சர்வதேச பிரமுகர்கள் அடங்கிய இவ் சுயாதீனக்குழு விசாரணைகளில் இலங்கை சட்டமா அதிபர் திணைக்களத்தின் தலையீடு குறித்து கவலை வெளியிட்டுள்ளது.

உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசு பெரும் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளது என அக் குழு தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம் பெற்று வரும் மனித உரிமை மீறல்களை வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் விசாரணை செய்து வரும் நிலையில் அதில் சட்டமா அதிபர் அலுவலகத்தில் தலையீடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைவாக இந்திய முன்னாள் தலைமை நீதியாளர் பகவதி தலைமையில் அமைக்கப்பட்டுள்ள ஜனாதி

## முஸ்லிம்கள் அரசாங்கத்துடன் நெருக்கமாகவே உள்ளனர்!

### அமைச்சர் அமீர் அலி விளக்கம்

(கொழும்பு)

இலங்கையில் முஸ்லிம் வர்த்தகர்களை கடத்தி அவர்களிடமிருந்து கப்பம் பெறப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி பிரசாரம் செய்து

எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

இது தொடர்பில் கொழும்பில் நேற்று மாலை நடந்த ஊடகவியலாளர்கள் மாநாட்டில் அவர் கூறியதாவது, மகிந்த ராஜபக்ஷ

எச்சரித்துள்ளது.

சர்வதேச பிரமுகர்கள் அடங்கிய இவ் சுயாதீனக்குழு விசாரணைகளில் இலங்கை சட்டமா அதிபர் திணைக்களத்தின் தலையீடு குறித்து கவலை வெளியிட்டுள்ளது.

இலங்கை மீண்டும் உள் நாட்டுப் போரை நோக்கிச் செல்வதாக கருதப்படுகின்ற இன்றய நிலையில் இடம் பெற்று வருகின்ற மனித வலகத்தில் தலையீடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைவாக இந்திய முன்னாள் தலைமை நீதியாளர் பகவதி தலைமையில் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழு தனது விசாரணைகளை சுதந்திரமாக மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளதென தெரிவிக்கப்படுகிறது. (ச-3,5)

(கொழும்பு)

இலங்கையில் முஸ்லிம் வர்த்தகர்களை கடத்தி அவர்களிடமிருந்து கப்பம் பெறப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி பிரசாரம் செய்து வருவது திட்டமிடப்பட்ட வதந்தி என்று பேரிடர் நிவாரண சேவைகள் அமைச்சரும் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

இது தொடர்பில் கொழும்பில் நேற்று மாலை நடந்த ஊடகவியலாளர்கள் மாநாட்டில் அவர் கூறியதாவது, மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்துடன் முஸ்லிம் மக்களுக்குள்ள நெருக்கத்தையும் அவர்கள் வழங்கி வரும் ஆதரவையும் (06 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு ஆயுதங்களை வழங்க இந்திய மத்திய அரசு காத்திருப்பு

## குழப்பத்தில் இலங்கை அரசாங்கம்

(கொழும்பு)

இலங்கைக்கு பல எம்.ஐ-17 ரக கனரக போக்குவரத்து உலங்குவானூர்திகளை விற்பனை செய்வதற்கு இந்திய மத்திய அரசு ஆயத்தமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் அதற்கான இறுதிக்கட்ட வேலைகளுக்கு இலங்கை அரசின் தெளிவான பதிலுக்கு இந்திய மத்திய அரசு காத்திருக்கின்றது என இராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை சந்தித்த பின்னர் இந்திய பாதுகாப்புத்துறை ஆலோசகரான எம்.கே.நாராயணன் தெரிவித்த கடுமையான கருத்துக்களை தொடர்ந்து இந்தியாவிடம் இருந்து இராணுவ ஆயுதங்களை வாங்குவதா விடுவதா என்ற குழப்பத்தில் இலங்கை அரசு உள்ளது. (06 ஆம் பக்கம் பார்க்க)

# பகிரங்க விவாதத்துக்கு மன்னிப்புச் சபை அழைப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம் பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணையாளருடன் பகிரங்க விவாதம் நடாத்த முன்வருமாறு சர்வதேச மன்னிப்புச் சபை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்துள்ளது.

ஜெனீவாவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தங்கியுள்ள நிலையில் சர்வதேச மன்னிப்புச் சபையின் பொதுச்செயலாளர் ஐறின் ஹான் இந்த கருத்தினை வெளியிட்டுள்ளார். (ச)

# இலங்கை இனப்பிரச்சினையில் இந்திய அணுகுமுறை மாறவேண்டும்

## ராமதாஸ் தெரிவிப்பு

(விழுப்புரம்)

இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தனது அணுகுமுறையை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று பா.ம.க நிறுவுனர் ராமதாஸ் கூறினார். அவர் மேலும் கூறியதாவது, 'எவரும் எங்களை தனிமைப்படுத்த விடமாட்டோம். எங்கள் துணைக்கு சார்க் நாடுகள் உள்ளன' என்று இலங்கை பாதுகாப்புத் துறை செயலர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் 4 சகோதரர்களும் ஒன்று சேர்ந்து இலங்கையில் தமிழினத்தை ஒட்டுமொத்தமாக அழித்து விட வேண்டும் என்பதில் தீவிரம் காட்டுகின்றனர். இதை பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் புரிந்து கொண்டுள்ளன. அங்குள்ள தமிழர்கள் இலங்கைப் (06 ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமை மீறல்களுக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பு

## மதத்தலைவர்கள் கூட்டறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்களுக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என நான்கு மதத் தலைவர்களும் நேற்று கூட்டாக வலியுறுத்தியுள்ளனர். படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மோதல் வலுவடைந்துள்ள இந்தக் கால கட்டத்தில் மனித உரிமை மீறல்களும் அதிகரித்துச் செல்வதாக மதத் தலைவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கண்டிக்கப்பட்டுள்ளது.

பௌத்த மதத் தலைவர் பெல்லன்வில விமலரத்தின, கிறிஸ்தவ மதத் தலைவர் பேராயர் ஒஸ்வால்ட் கோமிஸ் மற்றும் இந்து, முஸ்லிம் மதத் தலைவர்கள் நேற்று கொழும்பில் இடம் பெற்ற (06 ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# தமிழ்த் தினப் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்கள் இராணுவத்தால் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளிலிருந்து தமிழ்த் தினப் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்கள் யாழ்.பாதுகாப்புப் படையினரால் வரவேற்கப்பட்டனர். இவ் வரவேற்பு வைபவம் காங்கேசன்துறை நடேசன் கல்லூரியில் நடைபெற்றது.

இது தொடர்பாக பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டியில் கலந்து கொண்ட யாழ்.மாணவர்கள் 9 போட்டிகளில் பங்குபற்றி 8 போட்டிகளில் முதலிடத்தையும் ஒரு போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுச் சாதனை படைத்தனர்.

இந்தப் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்கள் குறைந்த வசதிகளுடன் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் கலந்து கொண்டு வெற்றியீட்டியதைக் கௌரவிக்கும் முகமாக யாழ்.பாதுகாப்புப் படைகளின் தளபதியின் ஆலோசனையின் பேரில் காங்கேசன்துறை நடேசன் கல்லூரியில் அவர்களை வரவேற்கும் வைபவம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த வரவேற்பு நிகழ்வில் யாழ்.பாதுகாப்புப் படைகளின் தளபதி சார்பில் கலந்து கொண்டு உரையாற்றிய முன்பிரதேச நிர்வாகக் கட்டளைத் தளபதி, போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களை வாழ்த்தியதுடன், அவர்கள் வெற்றிபெற உந்துதலாகவிருந்த ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோருக்கும் இராணுவத்தினர் சார்பில் வாழ்த்துத் தெரிவித்தார். (ச)

# சட்டவிரோத மனித போக்குவரவு பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கம்

(வாஷிங்டன்)

சட்டவிரோதமான மனித போக்குவரவு தொடர்பான அமெரிக்கக் கண்காணிப்புப் பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டிருப்பதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இக் கண்காணிப்புப் பட்டியலில் அண்டை நாடான இந்தியா 4-வது வருடமாகவும் இணைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக மனிதப் போக்குவரவு தொடருமானால் அந்நாடு கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

மனித போக்குவரவு தொடர்பான உரிய சான்றுகளை சமர்ப்பிக்காமை காரணமாகவே இலங்கை கண்காணிப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த சட்டவிரோத போக்குவரவு அறிக்கையில் புதிதாக அல்ஜீரியா, கினி ஆகிய நாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

தொழிலுக்காக அல்லது பாலியல் தொழில் மற்றும் இராணுவ சேவை என்பவற்றுக்காக 164 நாடுகளிலிருந்து மனிதர்கள் போக்குவரவு செய்யப்படுவதாக அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்கீழ் கறுப்புப் பட்டியலில் உள்ளடக்கப்படும் நாடுகளுக்கு எதிராக நிதி முடக்கம், மனிதாபிமான நடவடிக்கைகள் நிறுத்தம், வியாபார கொடுக்கல் வாங்கல் நிறுத்தம் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (ச-5)

# இந்தியக் குடியரசுத் தலைவர் தேர்தலில் ஆளும் கூட்டணி சார்பில் பிரதிபா போட்டி

(சென்னை)

இந்தியக் குடியரசுத்தலைவர் தேர்தலில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் வேட்பாளராக ராஜஸ்தான் மாநிலத்தின் தற்போதைய ஆளுநர் பிரதிபா தேவிசிங் பாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங் இல்லத்தில் நடைபெற்ற ஐக்கிய முற்போக்குக்கூட்டணி மற்றும் இடதுசாரிக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்குப் பிறகு செய்தியாளர்களிடம் இதையறிவித்தார் கூட்டணியின் தலைவர் சோனியா காந்தி.

பிரதிபா தேவிசிங் பாட்டிலை வேட்பாளராகத் தேர்ந்தெடுத்திருப்பது இந்தியக் குடியரசின் 60-வது ஆண்டில் வரலாற்றுச் சிறப்பு மிக்கத் தருணம் என்று மகிழ்ச்சி தெரிவித்தார் சோனியா.

சட்டத்துறையில் பட்டம்பெற்ற பிரதிபா தேவிசிங் பாட்டில்72 வயதானவர். மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் முதல் பெண் குடியரசுத் தலைவர் என்ற பெருமையைப் பெறுவார்.

மகாராஷ்டிரா மாநிலத்தின் காபினட் அமைச்சராகவும் எதிர்க்கட்சித் தலைவராகவும் மாநில காங்கிரஸ் தலைவராகவும் நாடாளுமன்ற மேலவைத் துணைத் தலைவராகவும் மக்களவை உறுப்பினராகவும்பணியாற்றிய அனுபவம் வாய்ந்த இவர், உள்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டில் உட்பட காங்கிரஸ் பரிந்துரைத்த பெயர்களை இடது சாரிக் கட்சிகள் நிராகரித்ததையடுத்துப் பிரதிபா பாட்டிலுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இவர் தெரிவு செய்யப்பட்டிருப்பது பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கப்படுவதற்கான ஒரு ஆரம்பமாக தான் கருதுவதாக தமிழக முதல்வர் கருணாநிதி கருத்து வெளியிட்டுள்ளார். (ச-5)

# 57 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மாற்றம்

(கொழும்பு)

புதிதாக உருவாகியுள்ள 57 ஆவது படையணியின் கட்டளைத் தளபதியை இராணுவத் தளபதி சரத் பொன்சேகா உடனடியாக மாற்றியுள்ளார்.

வவுனியா ஓமந்தைக்கு மேற்கேயுள்ள கல்மடுவை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் 57 ஆவது படையணியின் கட்டளைத் தளபதியான பிரிகேடியர் சுமித் மானவடு, கிழக்குப் பிராந்திய பிரிகேடியர் ஜெனரல் அதிகாரியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

57ஆவது படையணியின் புதிய தளபதியாக 56 ஆவது படையணியின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றிய பிரிகேடியர் சுளா டயஸ் நியமிக்கப்பட்டுள்ளார். (ச-5)


# பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கொழும்பில் மூன்று பேர் கைது

(கொழும்பு)

கொழும்புப் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் என சந்தேகிக்கப்படும் மூவரைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வத்தளை, கொட்டாஞ்சேனை மற்றும் மகரகம ஆகியபிரதேசங்களிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தற்போது தடுத்து வைக்கப்பட்டு தீவிரவிசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இதேவேளை நேற்று முன்தினம் மாலை கண்டி நகரில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகத்தின் பேரில் மூன்று தமிழ் இளைஞர்கள் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-3)



தமிழ்த் தினப்போட்டியில் கலந்து கொண்டபின் யாழ்ப்பாணம் திரும்பிய மாணவர்களும் ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

# மருந்தாளர்களுக்கான அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

மொத்த விற்பனைகளுக்கான மருந்து வகைகள் அனைத்தையும் கொழும்பிலி ருந்து ஒரே கப்பலில் எடுத்து வருவது என்ற அரச அதிபரின் ஆலோசனைக்கமைவாகப் பதிவு செய்யப்பட்ட தனியார் மொத்த விற்பனை மருந்தாளர்கள் தருவிக்கவிருக்கும் மருந்து வகைகளின் பட்டியலுடன் அவற்றைக் கொண்டு வருவதற்கான அனுமதிக் கடிதங்கள் தமது சிபார்சுடன் அரச அதிபருக்கு அனுப்புவதற்கு ஏற்றவாறு அமைந்திருக்க வேண்டுமென யாழ்.சுகாதார சேவை கள் பிரதி மாகாணப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரம் தேவையெனில் தமது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் அவர் கூறினார். (ச)

# வெளியேற்றப்பட்ட தமிழ் மக்கள் சார்பில் நேரடி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## மேலக மக்கள் முன்னணி தெரிவிப்பு

கொழும்பிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட தமிழ் மக்கள் சார்பில் நேரடி சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு மேலக மக்கள் முன்னணி தயாராகவுள்ளது.

மனித உரிமை சட்ட வல்லுநர்களின் உதவியுடன் நாம் வெளியேற்றப்பட்ட தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கத் தயாராகவுள்ளோம். இவ்வாறு மேலக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கொழும்பிலிருந்து வவுனியாவிற்கும் மட்டக்களப்பிற்கும் திருகோணமலைக்கும் தமிழ் மக்கள் பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். இன்னொரு பிரிவினர் மலையகப் பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளன.

இத்தகைய மனித உரிமை மீறல்களுக்கும் அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள நடமாடும் சுதந்திரத்தை மீறிய செயற்பாட்டிற்கும் எதிராக இதுவரையில் பொதுநலன் கருதிய சட்ட நடவடிக்கையே எடுக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட நபர்களின்சார்பில் நேரடிச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மீண்டும் கொழும்பிலிருந்துவெளியேற்றப்படுவதற்கு இத்தகைய பொதுநலன் கருதிய நடவடிக்கை முழுமையான உத்தரவாதத்தைத்தர முடியாது. இந்நிலையில் பாதிக்கப்பட்ட நபர்களின்சார்பில் நேரடிச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு மனித உரிமை சட்ட வல்லுநர்கள் தயாராகவிருக்கின்றார்கள். அன்றியும் இவர்களுக்குரிய வழிகாட்டல்களை வழங்குவதற்கு மேலக மக்கள் முன்னணி தயாராகவிருக்கிறது என்றுள்ளது. (ச)

# பிற்போடப்பட்ட நேர்முக பரீட்சை நாளை நடக்கும்

அதிபர் சேவை 2-II ற்காகக் கடந்த 11 ஆம் திகதி நடைபெறவிருந்த நேர்முகப் பரீட்சை நாளை [illegible]ற்றுக்கிழமை நடைபெறும் [illegible] யாழ். வலயக் கல்விப் பணிப்[illegible] வி.ரி. செல்வரத்தினம் அறி[illegible]ள்ளார். (ச)


## பாவனையாளர் கவனத்திற்கு

எமது பொன்னாங்காணி தைலம் போன்று போலியான தயாரிப்புக்கள் சந்தையில் விடப்பட்டுள்ளதாக நாம் அறிகின்றோம். மற்றும் போலியான மருந்துகளை வாங்கி பாதிக்கப்பட்டவர்களுக்கு நாம் பாத்திரவாளிகளல்ல என்பதை அறியத் தருகின்றோம். எமது சின்னத்திலோ, எமது பெயர்களிலோ தயார்பண்ணி விற்பனை செய்பவர்களுக்கு மிகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். எமது யாழ்ப்பாண ஏக விநியோகஸ்தராக சிவா நறுமணப் பூங்காவை நியமிக்கப்பட்டுள்ளதால் சிவா நறுமணப் பூங்காவிலும் அவர்களின் விற்பனை முகவர்களிடமும் பொன்னாங்காணித் தைலத்தைப் பெற்றுக் கொள்ளலாம். எமது தயாரிப்பிற்குரிய வெளிப்புறப்பெட்டி லெமனற் செய்யப்பட்டு பளபளப்பாகவிருக்கும்.




MANUFACTURED BY:
SITHARA PRODUCTS
PUTTALAM ROAD,
CHILAW.
(Reg No:- 6382) AR/PR/No-228

ஏக விநியோகஸ்தர்கள்:-
'சிவா நறுமணப் பூங்கா'
228, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-No:- 222 2567

(C-170)

# அரச சேவையில் இரு மொழிப் பயன்பாடு தமிழ்மொழி அமுலாக்கலுக்கு நடவடிக்கை

## அமைச்சர் டியூ குணசேகர அறிவிப்பு

அரச சேவையில் இருமொழிப் பயன்பாட்டை கட்டாயப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கமைய சகல அரச அலுவலகங்களிலும் மொழி அமுலாக்கல் அதிகாரியொருவரை நியமிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்மூலம் கடந்த 20 வருடங்களுக்குப் பின்னர் தமிழ்மொழியையும் அரசகரும மொழியாகப் பயன்படுத்துவதற்கான குறிப்பிடத்தக்க முக்கிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அரசியலமைப்பு விவகார மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.

அரச சேவையில் இருமொழிக் கொள்கை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதற்கு அமைவாக எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதியிலிருந்து அரச துறையில் தொழில் வாய்ப்பு பெறுபவர்கள் இரு மொழிகளில் தேர்ச்சிபெற வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றுநிருபம் அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறிய அமைச்சர் குணசேகரத ஜுலை முதலாம் திகதிக்குப் பின்னர் அரச துறைகளில் இணைபவர்கள் ஐந்து வருடகாலத்திற்குள் மற்றைய மொழியில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும். குறிப்பாக சிங்களவர்கள் தமிழ்மொழியையும் தமிழர்கள் சிங்கள மொழியையும் கற்றுத் தேறவேண்டும். இல்லாவிடில் ஐந்து வருடகாலத்திற்குப் பின்னர் பதவி உயர்வுகள் மற்றும் சம்பள உயர்வுகள் பெறுவதில் சிக்கலை எதிர்நோக்க வேண்டிவரும் என்று அரசியலைப்பு விவகார மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அரச கரும மொழிகள் கொள்கையைச் செயற்படுத்துவதற்காக தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான சட்டமூலம் கடந்த ஏழாம் திகதி பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்காக அகலவத்தையில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்குச் சொந்தமான கட்டமொன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது. பயிற்சி நெறிகளை நடத்துவதற்கென அரசாங்கம் 45 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளதாகக்கூறிய அமைச்சர் இந்தப் பயிற்சி நிறுவகத்தில் கற்று அரச மொழித் தேர்வுப் பரீட்சையில் சித்திபெறும் அரச மொழி பெயர்ப்பாளர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படுமெனவும் கூறினார்.

மொழிப் பரீட்சையில் தேர்ச்சி பெறும் நிர்வாகி தர உத்தியோகத்தருக்கு 25 ஆயிரம் ரூபாவும் நடுத்தர மட்டத்தில் உள்ளவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாவும் உத்தியோகத்தர் தரத்தில் உள்ளவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாவும் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்கப்படும். அதேநேரம் ஐந்து வருடங்களுக்கொரு தடவை ஊக்குவிப்புகள் உயர்வுகள் வழங்கப்படும்.

மேலும் கருத்துத்தெரிவித்த அமைச்சர் டியூ குணசேகர, அரச அலுவலகங்கள், திணைக்களங்கள் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டால், அரச கருமமொழிகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யுமாறும் அரச அலுவலகங்களில் தமிழ்மொழியில் கருமங்களை மேற்கொள்வதில் இடையூறுகள் ஏற்பட்டால் அல்லது தமிழ் மொழியிலான ஆவணங்கள் நிராகரிக்கப்பட்டால் அதுபற்றியும் முறைப்பாடு செய்யமுடியும் என்று தெரிவித்தார்.


குறிப்பாக நாட்டின் சகல பொலிஸ் திணைக்களங்களிலும் தமிழ் தெரிந்த உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோன்று ஏனைய துறைகளிலும் இரு மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

## ஒரே பிரசவத்தில் 6 குழந்தைகள்



அமெரிக்காவின் அரிஜொனா மாநிலம் பினிக்ஸ் நகரைச் சேர்ந்த 32வயது பெண் ஜென்னி மாசெக்கு ஒரே பிரசவத்தில் 6 குழந்தைகள் பிறந்தன. 3 பெண்குழந்தை 3 ஆண்குழந்தை.

சிசேரியன் ஆபரேஷன மூலம் இந்த குழந்தைகள் 30வாரம் 4 நாட்களில் பிறந்தன. இதில் 2 குழந்தைகளை இன்னும் விசேஷ கண்ணாடிப் பெட்டியில் வைத்து பாதுகாத்து வருகின்றனர். (அ-5)



பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினால் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை கல்வி கற்கும் மாணவிகளுக்கு பால் கரைத்து வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படத்தில் சுவாமிகளுடன் பாடசாலை அதிபர் மற்றும் உப அதிபரும் காணப்படுகின்றனர்.

## ஊடகவியலாளர் பரமேஸ்வரியின் அ.அட்டை, கடவுச்சீட்டு அபகரிப்பு

ஊடகவியலாளர் முனுசாமி பரமேஸ்வரியின் தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு என்பன நேற்று முன்தினம் காலை 10.45 மணியளவில் பொறளை பிரதான சந்தியில் உள்ள நிலத்தடி பாதசாரிகள் கடவையில் வைத்து இனந்தெரியாத இருவரினால் அபகரித்துச் செல்லப்பட்டது.

நாவல வீதியிலுள்ள தனது அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்த பரமேஸ்வரியை பின் தொடர்ந்து சென்று மறித்த இருவர் தங்களை பொலிஸாரென தெரிவித்துக்கொண்டு சோதனையிட வேண்டுமென கூறியுள்ளனர். எனினும் தன்னிடம் அடையாள அட்டை, கடவுச்சீட்டு, சாப்பாடு போன்றவையே இருப்பதாகவும் தங்களை பொலிஸ் என்று எப்படி நம்புவதெனவும் பரமேஸ்வரி கேட்டிருக்கிறார்.

எனினும் அடையாளஅட்டையும் கடவுச்சீட்டும் போலி ஆவணங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருப்பதாகக் கூறி அவற்றை தரும்படி பரமேஸ்வரியிடம் தங்களை பொலிஸாரென தெரிவித்த இருவரும் தங்களிடம் துப்பாக்கி இருப்பதாகவும் எச்சரித்துள்ளனர்.

இதையடுத்து பரமேஸ்வரி செய்வதறியாது தனது அடையாள அட்டையையும் கடவுச்சீட்டையும் அவர்களிடம் கொடுத்து எப்படி திரும்பப் பெறுவதென கேட்டிருக்கிறார். அதற்கு அவ்விருவரும் பிற்பகல் 2.30 மணயளவில் வெலிக்கடை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் வருமாறு கூறிவிட்டுச் சென்றுள்ளனர்.

பரமேஸ்வரி பின்னர் அங்கு சென்று காத்திருந்த போதும் அவர்கள் இருவரும் வராததை அடுத்து தனது அலுவலகத்தினருடன் தொடர்புகொண்டு அலுவலகத்தினரின் உதவியுடன் சட்டத்தரணி சகிதம் வந்து சம்பவம் பற்றி பொறளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (அ)

வட்டு-தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர ஆலய மஹோற்சவம்
4ஆம் திருவிழா



### வெவ்வினையை வேரறுக்க

வெவ்வினைகளை வேரறுத்து
அடியார்க்கு வேண்டிய
வரமதை வேண்டும் வேளைதனில்
நல்கி அருளாட்சி செய்யும்
சிலம்பின் அரசியே
உந்தன் பாதக் கமலமதை
எந்நாளும் பாடிப் பரவித்
தொழுது நிற்போம் நாமே!

ஸ்ரீ.சொரூபிகா

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்





### நயினை நாகபூசணி அம்மன் பாமாலை
### இன்று கொடியேற்றம்

### நயினையிலே கொடியேற்றி நலம் காட்டு!

நலம் தரும் நாகபூசணியே கொடியேற்று
நாடும் வரம் தரும் நாயகியே கொடியேற்று
நிலம் படும் துயர் தீர்க்க தாயே கொடியேற்று
நிரந்தர தீர்வுதர நாகபூசணியே கொடியேற்று
குலம் காக்கும் நாயகியே கொடியேற்று
கோரிக்கை நிறைவேற்றும் தாயே கொடியேற்று
வலம் வந்து கும்பிட வழிகாட்ட கொடியேற்று
வாஞ்சையுடன் உனைப் பணிந்தோம் கொடியேற்று

-மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தன்

### பாவம் போக்க கொடியினை ஏற்று

பொன்வண்டு போன்ற உன்றன்
பூவிழி ஊஞ்ச லாட
கண் கண்ட தெய்வம் நீயே
காப்பதுன் கடமை யன்றோ
மின்கண்ட கொடியே நாக
பூசணித் தாயே யென்னைத்
தின்கின்ற பாவம் போக்கக்
கொடியினை யேற்று வாயே

- கவிமணி கந்தமுருகேசதாசனார்

### அல்லவரும் நல்லவராய் ஆகிவர அருள்வாய்

வல்ல வரும் நல்ல வரும் உள்ளூரில் உய்ந்து உயர
நல்ல வழி காட்டவரும் நாயகியே நீயருள்வாய்
அல்ல வரும் நல்லவராய் வல்லவராய் ஆகிவர
மெல்லவழி காட்டிடுவாய் நாகபூசணி தாயே
புல்லவரும் பூமிதனில் புன்மைநெறி பரப்புவோரும்
சொல்லாமல் சாந்திடவே பூரணியே நீயருள்வாய்
எல்லையிலாத் தன்னருளால் நயினை நகர் நாயகியே
தொல்லை துயர் தீர்ந்திடவே கொடி யேறி அருள்வாய்

சுபா. காசிநாதன் M.Ed.

### அருளது தருவாய் நாகபூசணி

நல்லவளே வல்லவளே நாகபூசணி - நாட்டில்
தொல்லை தொடருவது தெரியலயோ
நல்லவை வருவதெப்போ அம்மா - வீட்டில்
செல்லமாய் படுத்துறங்கும் நாளேதடி நாகபூசணி

ஏறுது பார் கொடி
வருகுது பார் சன வெள்ளம்
உருகுது உன் அருள் வேண்டி
அருளது தருவாய் நாகபூசணி அம்மா

ம.கணேசலிங்கம்

### எம்மினத்தார் வாழக் கொடியேறு

கொடியேறு தாயே! கொடியேறு! சூழ்ந்து வரும்
துன்பமனைத்தும் அகன்றிடவே கொடியேறு
நாடின்றி நிம்மதியின்றி தவிக்கும்
எம்மினத்தார் வாழக் கொடியேறு
கோடி துன்பங்களை தாங்கும் அடியவரைக் காக்க
ஏழுகடல் நாயகியே கொடியேறு!

சின்கந்தையா, பொன்னாவளை காரைநகர்

### நல்லவரம் தந்திடுவாய்

கடல் சூழ்ந்த நயினையிலே சிங்கார கோயில் கொண்ட
நாகராஜ ராஜேஸ்வரி பாதம் போற்றி
மூன்று கோடி தேவர்கள் வேத மந்திரங்கள் ஓத
கொடியேறும் அம்பிகையின் நாமம் போற்றி
அலைகடலின் ஓரத்தில் சிலை வடிவாய் அமர்ந்திருந்து
ஏழுலகம் ஆளும் அவள் பாதம் போற்றி
தாயக மண் காப்பவளே தமிழர் துயர் துடைப்பவளே
ஆயிரம் கண் உடையவளே உமையே போற்றி
நாக மகுடம் மீதினிலே நாககன்னி குடைபிடிக்க வீதி
உலா வருபவளே தாயே போற்றி
கொடிய நோயைத் தீர்த்தவளே கோடி இன்பம் தருபவளே
உன்பாதம் பணிந்து நிற்பேன் தாயே போற்றி
உன்நாமம் உலகெங்கும் ஒலித்திட வேண்டும்
கோடி மக்கள் உன் புகழைப் போற்றிட வேண்டும்
கைகூப்பி வணங்கி நிற்பேன் நல்லவரம் தந்திடுவாய்
நாகராஜ ராஜேஸ்வரி போற்றி போற்றி

ம.புவனா, கன்னாதிட்டி

# இன்று ஒரு தகவல்

## நமக்குத் தெரியவில்லை !

ஓர் உயரமான மரம். அந்த மரத்தின் உச்சியிலே ஒரு பறவை கூடுகட்டியிருந்தது. அது ராஜாளிப் பறவை! அந்தக் கூட்டிலே அது முட்டையிட்டிருந்தது.

ஒரு குரங்கு அந்த மரக்கிளையிலே தாவித்தாவிக் குதித்துக் கொண்டிருந்தது... அப்பொழுது அந்தக் கூட்டிலே இருந்த முட்டை அதன் கண்ணிலே பட்டது... குரங்கு சும்மா இருக்குமா? விளையாட்டாக ஒரு முட்டையை எடுத்தது.

மரத்தைவிட்டுக் கீழே இறங்கியது!.. கீழே ஒரு குப்பை மேட்டிலே ஒரு கோழி சில முட்டைகளை இட்டிருந்தது... குரங்கு தன்கையிலே இருந்த ராஜாளிப் பறவை முட்டையை அந்தக் கோழி முட்டைகளோடு வைத்துவிட்டுப் போய்விட்டது.

கோழிக்கு தன் முட்டைகளுக்கும் ராஜாளிப் பறவை முட்டைக் கும் வித்தியாசம் தெரியவில்லை... தன்னுடைய முட்டைகளோடு அந்த முட்டையையும் சேர்த்து அடைகாத்தது...

கொஞ்ச நாட்களிலே குஞ்சுகள் பொரித்தன. ராஜாளிப் பறவையின் குஞ்சு... கோழிக்குஞ்சுகளுடன் சேர்ந்து வளர்ந்தது. மற்றைய கோழிக் குஞ்சுகளைப் போலவே இதுவும் குப்பையைக் கிளறியது... புழு, பூச்சிகளைச் சாப்பிட்டது...

காக்கைகளைக் கண்டால்... மற்றைய கோழிக்குஞ்சுகளைப் போலவே இதுவும் பயந்து தாய்க்கோழியின் சிறகுகளுக்குள்ளே வந்து ஒளித்துக்கொள்ளும். இப்படியாகக் கொஞ்சக் காலம் போயிற்று... குஞ்சுகள் எல்லாம் வளர்ந்து பெரிதாயின!...

சில சேவல்கள்... சில பேடுகள்... ஒன்று மட்டும் ராஜாளி... ஆனால் தான் ஒரு ராஜாளி என்பது அதற்குத் தெரியாது. தன்னையும் ஒரு கோழியாகவே அது நினைத்துக்கொண்டிருந்தது... குப்பை மேட்டைக் கிளறிக்கொண்டிருந்தது.

அப்பொழுது அண்ணாந்து பார்க்கிறது... வானத்திலே... உயரத்திலே... கூட்டம் கூட்டமாக ராஜாளிப் பறவைகள் உல்லாசமாக வட்டமடித்துப் பறந்து கொண்டிருந்தன... அதை இது பார்க்கிறது.

இதற்கு மனதினுள்ளே ஏக்கமாம்!... அதற்கு ஆண்டவன் மேலே கோபம் வந்ததாம்... "ஆண்டவனுக்கு ஏன் என் மீது இந்த ஓரவஞ்சனை... என்னையும் ஒரு ராஜாளியாகப் படைத்திருந்தால்... நானும் இந்த நேரம் ஆகாயத்திலே உல்லாசமாகப் பறந்து கொண்டிருப்பேனே..." என அது வருத்தப்பட்டதாம்.!

ஒரு வகையிலே பார்த்தால் நாம்கூட இந்த ராஜாளிப் பறவை மாதிரித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்கிறார் உளவியல் நிபுணர் எம்.ஸ்காட்பெக்.

நம்மால் எவ்வளவு வேலைசெய்ய முடியும் என்று நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோமோ அதைவிடப் பல மடங்கு நம்மாலே வேலைசெய்ய முடியும்... பல மடங்கு வேகமாகவும் செய்யமுடியும் என்கிறார் அவர்.

நமது முழுமையான பலம் என்ன என்பது நமக்கே தெரிவதில்லை... ஓர் ஆள் இருந்தான். அவனுக்குக் கோழியைக் கண்டால் பயம். நடுங்க ஆரம்பித்து விடுவான்!... ஏனென்றால் அவன் மனதுக்குள்ளே தான் ஒரு புழுஎன்று நினைப்பு...

புழுவைக் கண்டால் கோழி கொத்தித்தின்னுமல்லவா? அதனாலே கோழி எதிரே வந்தால் இவன் நடுங்க ஆரம்பித்து விடுவான்... ஒரு மன நோய் டாக்டரிடம் போனான். தன்னுடைய பிரச்சினையைச் சொன்னான்... அவர் இவனைத் தங்கவைத்து ஒரு வாரம் "டிரீட்மென்ட்" கொடுத்தார். அதன்பின் அவனைப் பார்த்து...

"இனிமேல் நீ வீட்டுக்குப் போகலாம்... நன்றாக ஞாபகம் வைத்துக்கொள்... இனிமேல் நீ 'புழு' அல்ல. மனிதன்... தைரியமாகப் புறப்படு" என்று சொல்லி வழியனுப்பி வைத்தார். அவன் புறப்பட்டுப் போனான்... பாதிவழி போயிருப்பான்... எதிரிலே ஒரு கோழி வந்துகொண்டிருந்தது... அவ்வளவு தான்!

அவன் உடம்பு நடுங்க ஆரம்பித்துவிட்டது... திரும்ப ஓடி வந்துவிட்டான்... டாக்டரிடம் போனான்.. "ஏன் திரும்ப ஓடி வந்திருக்கிறாய்" என்று டாக்டர் கேட்டார். "எதிரிலே ஒரு கோழி வந்துகொண்டிருக்கிறது"... என்றான் அவன்!

நான்தான் சொன்னேனே... "நீ புழு இல்லை... மனிதன்... நீ ஒரு புழு இல்லை என்பது இன்னமும் உனக்குப் புரியவில்லையா...?" என்றார் டாக்டர். "நான் புழு இல்லை என்பது எனக்குத் தெரிந்துவிட்டது... ஆனால் அந்தக் கோழிக்கு இது தெரியுமா என்பது தெரியவில்லையே..." என்றான் அவன்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# வடக்கு, கிழக்கு முழுவதையும் புலிகளிடமிருந்து கைப்பற்றுவோம்

இன்னும் சில வாரங்களுக்குள் வடக்கில் உள்ள புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசங்கள் முழுவதையும் பாதுகாப்புப் படையினர் கைப்பறறவுள்ளதாக இராணுவத் தளபதி சரத்பொன்சேகா தெரிவித்துள்ளதாக 'திவயின' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தொப்பிகலை பிரதேசத்திலிருந்து வெளியேறிய விடுதலைப் புலி உறுப்பினர்களில் சுமார் 250 பேர் வரையானோர் சிறைவாசம் அனுபவித்து வருவதாகவும், விடுத லைப் புலிகளை தோற்கடித்து எதிர்வரும் சில வாரங்களுக்குள் வடக்கு- கிழக்கிலுள்ள புலிகளின்கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் முழுவதையும் பாதுகாப் புப் படையினர் கைப்பறறவுள்ளதாகவும் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரால் கைப்பற் றப்பட்ட தொப்பிகலை பிரதேசத்திலிருந்து சுமார் 10 கிலோமீற்றருக்கு அப்பாலே விடுதலைப் புலிகளின் தலைவர்கள் உட்பட சிறுவர் படையணி வரையானோர் சிறைவாசம் அனுபவித்து வருவதாக தளபதி மேலும் தெரிவித்தார்.

பயங்கரவாதிகளை தோற்கடித்து வடக்கு கிழக்கு பிரதேசங்கள் கைப்பற்றப்படுவதற்கு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களால் கடந்த சில மாதங்களுக்குள் சுமார் 1000 புலி உறுப்பினர்கள் பலியாகி யுள்ளதாகவும் , சிலர் காயமடைந்துள்ளதோடு 90 புலி உறுப்பினர்களின் சடலங் கள் இராணுவத்தினரால் கண்டுபிடிக்கப்பட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரி வித்தார்.

அத்தோடு இவர்கள் வசம் இருந்த ஆயுதங்கள் சிலவும் விமானப்படையினரால் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த ஒரு சில வாரங்களுக்குள் தொப்பிகலை தாக்குதல்களில் சுமார் 70 புலி உறுப்பினர்கள் பலியாகியுள்ளதோடு, 350 பேருக்கு மேல் காயமடைந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரியவந்துள்ளது.

தொப்பிகலை பிரதேசத்தில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முகாம்களில் 90 வீதத்திற்கும் மேற்பட்ட பகுதிகளை இராணுவத்தினர் கைப்பற்றி சேதமடையச் செய்துள்ளதாகவும், ஏனைய சிறு பகுதிகளையும் கூடிய விரைவில் கைப்பற்றவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். எது எப்படியிருப்பினும் எதிர்வரும் ஒரு சில வாரங் களுக்குள் வடக்கு , கிழக்கு பிரதேசங்கள் முழுவதையும் தாம் கைப்பற்றுவதற்கு தயாராக வுள்ளதாக இராணு வத் தளபதி சரத் பொன்சேகா மேலும் தெரிவித்தார்.

(அ-5)

## மாணிக்கவாசகர் குருபூசை

இந்து கலாசார திணைக்கள வலிகாம பிரதேசம் நடாத்தும் மாணிக்கவாசகர் குருபூசை சங்கானை வேல்வில் அறநெறிப் பாடசாலை பிரதான மண்டபத்தில் 20ஆம் திகதி புதன்கிழமை பி.ப.12.30 மணிக்கு வலிகாமம் அபிவிருத்தி உதவியாளர் த. பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும், சிறப்பு விருந்தினராக இந்து கலாசாரத் திணைக்கள உதவிப்பணிப்பாளர்.ய.அநிருத்திரனும், கௌரவ விருந்தினராக இளைஞர் சேவைகள் மன்ற உதவிப்பணிப்பாளர் தட்சணாமூர்த்தியும் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)

# மகாத்மா காந்தி பிறந்த அக்டோபர் 2 சர்வதேச அகிம்சை தினமாகப் பிரகடனம்

ஐக்கிய நாடுகள் சபை மகாத்மா காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2ஆம் திகதி சர்வதேச அகிம்சை தினமாக அறிவிக்க உள்ளது .உலகம் முழுவதும் அமைதிக்காக பாடுபட்டதையொட்டி காந்திக்கு இந்த கௌரவம் அளிக்கப்படுகிறது.

இன்றைய சூழலில் உலக நாடுகளிடையே அகிம்சையை கடைப்பிடிப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் இந்தியா தீர்மானம் கொண்டுவருகிறது. ஐ.நா.வில் உள்ள மொத்தம் 191 நாடுகளின் உறுப்பினர்களின் 120 பேர் ஆதரவு தெரிவித்துள்ளதால் இத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்படும் எனத் தெரிகிறது.

முதல் முறையாக வரும் அக்டோபர் 2ஆம் திகதி சர்வதேச அகிம்சை தினம் கடைப்பிடிக்கப்படும். இதன் பின்னர் இது வருடந்தோறும் நடக்கும் ஒரு நிகழ்ச்சியாக அமையும். நாடுகளிடையே நடக்கும் மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஐக்கிய நாடுகள்சபை பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டுள்ள நேரத்தில் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளது பொருத்தமானது என்று வெளிநாட்டு தூதர்களும் அதிகாரிகளும் தெரிவித்தனர்.ஐ.நா.சபையில் முறைப்படி இத் தீர்மானம் கொண்டு வரப்படும் நிகழ்ச்சியில் மத்திய வெளியுறவு துறை இணை அமைச்சர் ஆனந்த் சர்மாவும் பங்கேற்பார்.



இந்தியாவுடன் வங்கதேசம், நேபாளம், ஆப்கானிஸ்தான், பூட்டான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் சேர்ந்து தீர்மானத்தைக் கொண்டு வருகின்றன. ரஷ்யா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

இத் தீர்மானம் குறித்து ஐக்கிய நாடுகள் பரிசீலிக்கும் சமயத்தில் மேலும் பல நாடுகள் இதற்கு ஆதரவு தெரிவிக்கக் கூடும். அகிம்சை, சகிப்புத்தன்மை, மனித உரிமைகள் பேணி காப்பது மற்றும் அனைவரின் அடிப்படை உரிமையை காப்பது ஜனநாயகம், வளர்ச்சி பரஸ்பர புரிந்துணர்வுகொள்ளுதல் என்பன தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

செப்டெம்பரில் நடக்கும் ஐ.நா.சபையின் 62வது கூட்டத்துக்கு பின்னர் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 2ஆம் தேதி சர்வதேச அகிம்சை தினமாக கடைப்பிடிக்கப்படும். எனவே அனைத்து உறுப்பினர் நாடுகள், பொதுநல அமைப்புகள், தனிநபர்கள் அகிம்சை குறித்து கல்வி மற்றும் பிரசாரம் மூலம் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (அ-5)

# இராசிபலன்

16.06.2007
(ஆனி 2, சனிக்கிழமை)
பிரதமை முற்பகல் 8.05 மணிவரை
திருவாதிரை முன்னிரவு 09.18மணிவரை
இராகுகாலம் 08.53-10.23 மணிவரை
சுபநேரம் 02.53-04.23 மணிவரை
நயினை அம்மன் கொடி

**மேடம்:-** எடுத்த காரியம் கைகூடும், போசனசுகம், நற்கீர்த்தி, மனோதைரியம்.

**இடபம்:-** மனோசங்கடம், போசனசுகக்குறைவு, முயற்சி தாமதம், அதிக செலவு.

**மிதுனம்:-** வெகுமானம், நல்ல வரவேற்பு, தெய்வ சிந்தை, புதிய முயற்சி.

**கடகம்:-** எடுத்த காரியம் தாமதமாகும், பணவிரயம், சயனசுகக்குறைவு, வீண்பகை.

**சிங்கம்:-** முயற்சி கைகூடும், போசனசுகம், பெருமையடைதல், குடும்பசுகம்.

**கன்னி:-** பிரபுத்தனம், இஷ்டசித்தி, ஆரோக்கியம், விருந்துபசாரம்.

**துலாம்:-** புத்திரரால் கவலை, வயிற்றுக்கோளாறு, கட்டுப்பாடு, திடீர்பயணம்.

**விருச்சிகம்:-** மனக்கவலை, சரீரப்பீடை, பிறருக்கு உதவுதல், முயற்சி தாமதம்.

**தனுசு:-** தேகநலன், சயனசுகம், பொருள் சேர்க்கை, காரிய நன்மை.

**மகரம்:-** தடைப்பட்ட காரியம் கைகூடும், கீர்த்தி, போசன நன்மை, உற்சாகம்.

**கும்பம்:-** பயந்த சுபாவம், காரியதாமதம், கௌரவக் குறைவு, பணக்குறை.

**மீனம்:-** சுபநிகழ்வு, உறவினர் சந்திப்பு, புதிய மனநிலை, நல்ல முயற்சி.

-வளவன்

## பயிற்சிக் கருத்தரங்கு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் தென்மராட்சிப் பிரதேச இந்து அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு -2007 இன்று காலை 8 மணிக்கு, சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இந்து கலாசார திணைக்கள உதவிப் பணிப்பாளர் ய.அநிருத்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் "இந்துசமய வரலாறு" என்றும் பொருளில் சாவ.இந்துக்கல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் கமலநாதனும் "இந்து சமய வாழ்வியல்" என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வ நாயகமும், "இந்து சமய மெய்யில்" பற்றி சிவத்தமிழ் சொல்லழகர் ச.லலீசனும், "இந்துசமய இலக்கியம்" என்னும் பொருளில் ஆசிரிய் ஆலோசகர் சைவப்புலவர் கந்தசத்திய தாசனும் விரிவுரையாற்றவுள்ளனர். (அ)

## விண்ணப்பப் படிவங்கள்

வலி.கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் 1000 முதியோருக்கு அடையாள அட்டை வழங்கு வதற்குரிய படிவங்களையும், ஊனமுற்றோருக்கு உபகரணங்கள், சமூக நலத் துறைத் திணைக்களம் மூலம் பெறுவதற்குரிய 500 படிவங்களையும் கரித்தாஸ்- கியூடெக் நிறுவனம் வழங்கியுள்ளதாக கோப்பாய் பிரதேச செயலர் C.A. மோகன்றாஸ் அறிவித்துள்ளார். (அ)

பிறர் மனம் வருந்தச் செயல்புரியாதீர்கள். உங்கள் உரிமைகளை விட்டுவிடாதீர்கள். பிறர் உரிமையில் தலையிடாதீர்கள்.

– சுவாமி இராமதாசர்

வலம்புரி

# நயினாதீவு செல்லும் பக்தர்களுக்கு இடையூறு ஏற்படாதிருக்க வேண்டும்

வரலாற்றுப் பெருமை மிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் ஈழத் தமிழர்களின் வரலாற்றுப் பெருமைக்கும், தொன்மையான சமயப் பாரம்பரியத்திற்குமான சக்தி பீடமாகும்.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் மஹோற்சவம் ஆரம்பித்து விட்டால் இலங்கை மட்டுமன்றி வெளிநாடுகளிலிருந்தும் ஈழத் தமிழர்கள் வருகை தருவர்.

அலைகடல் நடுவே வீற்றிருந்து அருள்பாலிக்கும் அன்னை நாகபூசணி மீதுஇந்து சமயத்தவர்கள் மட்டுமன்றி பிற சமயத்தவர்களும் நம்பிக்கை கொண்டு தமது நேர்த்திக் கடன்களைத் தீர்த்துக் கொள்வதற்காக ஆலயத்திற்கு வருகை தருவர்.

எனினும் தற்போது நாட்டின் சூழ்நிலை, குறிப்பாக யாழ்.குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலைகள் அன்னை நாகபூசணியின் மஹோற்சவத்தில் பக்தர்கள் கலந்து கொள்வதற்குத் தடையாகவுள்ளது.

அதிலும் நயினாதீவு அமைந்துள்ள தீவகத்தின் நிலைமை படுமோசமாக மாறிவிட்டது. எதுவும் எந்த நேரமும் நடக்கலாம் என்ற பயம் பக்தர்களின் ஆலய தரிசனத்திற்கு இடைஞ்சலாகவே யுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து நயினாதீவுக்குச் செல்லும் வரையான பயணத்திற்குள் சந்திக்கக் கூடிய சோதனைச் சாவடிகள், இறக்கங்கள், பதிவுகள், கையுயர்த்தல், பாஸ்நடைமுறைகள் என்றவாறு பல்வேறு இடைஞ்சலுக்கு முகம்கொடுத்தே செல்ல வேண்டியிருக்கும்.

இதனால் நயினாதீவுக்குச் செல்லும் பக்தர்கள் சொல்லொணாக் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது. நயினாதீவுக்குச் செல்லும் பக்தர்கள் மீது நடத்தப்படும் சோதனை நடவடிக்கையானது - ஆலயத்திற்குச் செல்பவர்களின் எண்ணிக்கையை கணிசமான அளவு குறைத்து விடுவதுடன் ஆலய வழிபாட்டிற்குக் கூட, நமக்கு உரிமைஇல்லையென்ற உணர்வை தோற்றுவித்து விடும்.

ஆலய வழிபாடுகள், நம்பிக்கைகள், நேர்த்திக் கடன் நிறைவேற்றுதல்கள் என்பவற்றிற்கு விதிக்கப்படும் தடை மனித சமூகத்தைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்ல வழிவகுக்கும்.

எனவே ஈழத் தமிழர்களின் வழிபடு கடவுளாக-வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயமாக விளங்கும் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு பக்தர்கள் எதுவித இடைஞ்சல்களுமின்றி சென்று வருவதற்கு ஏற்ற சுமுகமான சூழ்நிலையைக் கடற்படையினர் செய்து கொடுக்க வேண்டும்.

அதேபோல் போக்குவரத்துச் சேவைகள், கடல் வழிப் பயண ஏற்பாடுகள் அனைத்தும் எதுவித தடை - தாமதமின்றி இடம்பெறுவதற்கு சம்பந்தப்பட்ட அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்குவது கட்டாயமானதாகும்.

கடந்த வருடம் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை பணியாளர்களுக்கும் தனியார் போக்குவரத்துச் சேவையினருக்கும் இடையே ஏற்பட்ட முரண் நிலை காரணமாக போக்குவரத்துச் சேவைகள் தடைப்பட்டிருந்தன.

அதேபோன்ற துர்ப்பாக்கிய நிலைமை இவ் வருடம் இடம்பெறாமல் இருக்க சம்பந்தப்பட்ட முகாமைகள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

# மூன்று வருடத்திற்குள் பிரபாகரனை அழிக்க இராணுவத்திற்கு கோத்தபாய உத்தரவு

## ஹெரால்ட் டிரிபியூன் செய்தி

(நியூயோர்க்)

தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைப் படுகொலை செய்ய இலங்கை இராணுவத்திற்கு உத்தரவிட்டுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாக நியூயோர்க் டைம்ஸின் அனைத்துலகப் பதிப்பான அனைத்துலக ஹெரால்ட் டிரிபியூன் செய்தி வெளியிட்டுள்ளது.

பாரிஸில் அச்சிடப்பட்டு 35 நாடுகளில் விநியோகிக்கப்படும் அனைத்துலக ஹெரால்ட் டிரிபியூனின் வெளியீட்டின் முதல் பக்கத்தில் புதுடில்லியைச் சேர்ந்த அதன் தெற்காசிய செய்தியாளர் சோமினி சென்குப்தா எழுதியுள்ள கட்டுரையில் இடம் பெற்றுள்ள தகவல்கள் வருமாறு,

யாழ்.குடாநாட்டில் தற்போது புதிய ஒரு அச்சம் தோன்றியுள்ளது. முன்னர் நடந்தவைகளைவிட இது புதுவிதமான ஆபத்தாகும். இந்த விசித்திரமான அச்சம் ஊரடங்கு வேளைகளில் மக்கள் கடத்தப்படுவதனால் ஏற்பட்டுள்ளது. கடத்தல்கள் நிகழும்போது இராணுவத்தினரும் கட்டாக்காலி நாய்களும்தான் வீதிகளை ஆட்சி புரிகின்றன. கறுப்பு நிற ஏரியைத் தாண்டி நிகழ்த்தப்பட்ட பீரங்கித் தாக்குதல் இரவின் அமைதியைக் குலைத்தது. யாழ்.குடாநாட்டிலிருந்து வெளியே செல்லும் சாலை கடந்த ஆண்டு ஓகஸ்டிலிருந்து மூடப்பட்டுள்ளது.

இது அந்தப் பகுதியை மக்கள் செல்லமுடியாத பகுதியாக மாற்றியுள்ளது. இன்று உணவு, எரிபொருள்கள் என்பன குடாநாட்டிற்கு அனுப்பப்பட்டு வருகின்றன. எனினும் அங்குள்ள நகரத்தில் சந்தை மாலை வேளைகளில் மூடப்பட்டு விடும். கடை உரிமையாளர்கள் அதிகளவு பொருள்களைக் கையிருப்பில் வைத்திருக்க விரும்புவதில்லை.

ஏனெனில் எப்போது கடையை மூடிவிட்டு ஓடுவோம்என்பது அவர்களுக்குத் தெரியாது. இரவு 7 மணிக்கே எல்லாக் கடைகளும் யாழ்.நகரத்தில் மூடப்பட்டுவிடும். கட்டாக்காலி நாய்கள் மட்டுமே நகரத் தெருக்களில் ஓடித்திரிகின்றன. இரவு 8 மணிக்கு அமுல்படுத்தப்படும் ஊரடங்குச் சட்டத்திற்கு முன்னதாக மக்கள் வீடுகளுக்குள் முடங்கிவிடுவார்கள். கதவுகள் மூடப்பட்டுவிடும்.

இது கடந்த 10 மாதங்களாக நடந்து வரும்நிகழ்வு. இராணுவத்தினர் ஒடுங்கிய வீதிகளில் முனைகளில் மறைந்து பதுங்கி விடுவார்கள். வாகனங்கள் செல்லும்போது வெளிச்சங்கள் பாய்ச்சப்படும். நாய்களைத்தவிர எல்லாம் அசைவின்றியிருக்கும். இதுதான் இன்றைய யாழ்ப்பாணம்.

கால்நூற்றாண்டு இனப்போரின் வடிவம் இது. புதிய பூகம்பத்திற்கான ஆயத்தம் இது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் பருவ மழைக்கு முன்னர் யாழ்.குடாநாட்டிற்கான பெரும் சமரை தான் எதிர்பார்ப்பதாக யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம்செயலிழந்து விட்டது. கடந்த ஒரு வருடமாக தீவில் விடுதலைப்புலிகளுக்கும்அரச படையினருக்கும்இடையில் மோதல்கள் வலுவடைந்துள்ளன. இராணுவம் சிங்களவர்களையே பெரும்பான்மையாகக் கொண்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் தகவல்களின்படி கடந்த 18 மாதங்களில் 4 ஆயிரத்து 800 ற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

எனினும் சுயாதீன தகவல்கள் அல்ல. இது மேலும் தொடரலாம். விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை அழிப்பதற்கும் விடுதலைப்புலிகளை முற்றாக ஒழிப்பதற்கும் தமது படையினருக்குத் தான் அறிவுறுத்தியுள்ளதாகவும் விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடத்தை அழிப்பதே தமது பிரதான இலக்கு எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கடந்த மாதம் எமக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இந்தப் பணி முடிய மூன்று ஆண்டு காலமாகும் என்றும் அவர் கூறினார். அமைதிப் பேச்சுக்கள் அண்மையில் இல்லை. அனைத்துலக நாடுகளின்அழுத்தங்களும் அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளின் உதவி நிதிகளின் நிறுத்தங்களும் இலங்கை அரசின் இராணுவத் தீர்வுத்திட்டத்தில் சிறிய தாக்கத்தையே உண்டுபண்ணியுள்ளது.

விடுதலைப்புலிகளை அமெரிக்கா உட்பட பல நாடுகள் தடைசெய்துள்ளன. இரு இருக்கைகளைக் கொண்ட இலகுரக வானூர்திகள் மூலம் அவர்கள் வான் தாக்குதலை நிகழ்த்தியுள்ளனர். இந்த ஆயுதம் தற்போதுள்ள மிகவும் வலிமையானது.

யாழ்ப்பாணத்திற்குப் போர் புதிதல்ல. அங்குள்ள ஆலயங்கள் மற்றும் தேவாலயங்களிலும் முன்னர் நடைபெற்ற போரின் வடுக்களுள்ளன. அங்குள்ள மக்களுக்கு ஓடுவதும் மரணங்களும் பழக்கமாகிவிட்டன. வேறு எந்த இடமும் இவ்வளது துன்பத்தை அனுபவிக்கவில்லை.

ஏனெனில் அவற்றிற்கு யாழ்ப்பாணத்திற்குள்ள சிறப்பம்சங்கள் இல்லை. அது விடுதலைப்புலிகளின் போர் புரியும் தாய் நாட்டின் இதயப்பகுதியாகும். 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இருந்து 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் வரையிலும் யாழ்.குடாநாட்டில் நடைபெற்ற கடத்தல்கள் தொடர்பாக தமக்கு 805 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, அரச நிறுவனங்கள் என்பன தெரிவித்துள்ளன.

எனினும் 230 கடத்தல்களே நடைபெற்றுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது. சில சமயங்களில் மட்டும் சிலர் இதிலிருந்து தப்புவதுண்டு. கடந்த ஆண்டு ஜனவரி மாதம் அருணகிரிநாதன் நிருபராஜ் என்ற பல்கலைக்கழக மாணவன் அவரது கிராமத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்டிருந்தார்.

அவர் பல தடவை தொடர்ச்சியாக இராணுவ முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளாரா? என விசாரணை செய்யப்பட்டார். அதன்போது கடத்தல்காரர்கள் தன்னை தலை கீழாகக் கட்டித் தொங்கவிட்டு தமது பாதத்தில் அடித்ததாகவும் தனது தலையை பொலித்தீன் பையினால் மூடிக்கட்டிவிட்டு அதற்குள் பெற்றோலை ஊற்றியதாகவும் தனது மலவாசலினூடாக தடியைச் செலுத்தியதாகவும்அவர்தெரிவித்தார்.

ஏழு நாள்களின் பின்னர் புகையிரதப் பாதை அருகே அவர் விடப்பட்டிருந்தார். அதன் பின்னர் அவரது சிறுநீரகம் செயலிழந்து விட்டது. ஒரு காதும் கேட்பதில்லை. எந்த உணவையும் அவரால் உண்ணமுடியவில்லை. ஏப்ரல் மாதம் நிருபராஜ் (வயது-26) தென்னிந்திய நகரான சென்னைக்குச் சென்றுவிட்டார். தனக்கும் விடுதலைப்புலிகளுக்கும் தொடர்புகள் இல்லை என அவர் கூறி வருவதுடன் தனது கடத்தல் தொடர்பாக யாரும் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த மே மாதம் அமெரிக்காவின் உயர் பிரதிநிதியான றிச்சட் பௌச்சர் யாழ்.வந்தபோது சந்திரசிறியைச் சந்தித்துக் கடத்தல்கள் தொடர்பாக தமது அதிருப்தியைத் தெரிவித்திருந்தார். அதன் பின்னர் கடத்தல்கள் குறைந்திருந்தன. கத்தோலிக்க ஆலயங்களுக்கும் நிச்சயமற்ற தன்மை தோன்றியுள்ளது. அது அல்லைப்பிட்டியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் இல்லமாக மாறியிருந்தது.

இலங்கையில் 3 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. கடற்கரைப் பகுதியை படையினர் ஆக்கிரமித்துள்ளதால் அங்கு மீன் பிடிக்க முடியாதென பல குடும்பங்கள் துன்பத்தில் மூழ்கியுள்ளன. பல வாரங்களாக உணவு உதவிகளும் கிடைக்கவில்லை. அரிசிக்காகப் பெண்கள் தமது தங்க வளையல்களை விற்பனை செய்து வருகின்றனர்.

சில சமயம் அவர்கள் சாப்பிடுவதில்லை. அதனை தமது பிள்ளைகளுக்காகச் சேமிக்கின்றனர். ஐக்கிய நாடுகள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட அவசர ஆய்வுகளில் யாழில் பெருமளவான சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அதன் ஆய்வு வெளியீடுகளை அரசு தடுத்துள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-5)

# கொழும்புத் தமிழர்களை வெளியேற்றியமை கண்டனத்துக்குரியது–தேசிய கிறிஸ்தவ சபை

(கொழும்பு)

தலைநகர் கொழும்பிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்டமை கண்டனத்துக்குரியது என்று தேசிய கிறிஸ்தவ சபை கண்டனம் தெரிவித்துள்ளது. தேசிய கிறிஸ்தவ சபை வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

கடந்த ஜூன் 7 ஆம் திகதி கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட செய்தி உள்நாட்டு மற்றும்அனைத்துலக ஊடகங்களில் வெளியாகியுள்ளது.

இது ஒரு மனிதாபிமானமற்ற நடவடிக்கை. பொதுமக்களிடத்தில் பாரியஅதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. கோபத்தை உருவாக்கியுள்ளது. இது ஒரு குறுகிய பார்வை கொண்ட நடவடிக்கை. இது நாட்டுக்கு கேடு ஏற்படுத்தும் செயலாகும். அரசியலமைப்பினால் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகளைப் பாரிய அளவில் மீறியசெயலாகும்.

இந் நடவடிக்கையை எதிர்த்து மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் பொலிஸ் மா அதிபரிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விளக்க அறிக்கை கோரியுள்ளார். மகிந்த மேற்கொண்டுள்ள் நடவடிக்கையைப் பாராட்டுகிறோம். அரசாங்கத்தின் மீதும் ஜனாதிபதி மீதும் நம்பிக்கையை ஏற்படுத்த அந்த அறிக்கை பகிரங்கமாக வெளியிடப்பட வேண்டும்.

அதேபோல் வடமேற்கு மாகாணம் வென்னப்புவப் பகுதியில் 9 அடையாளம் தெரியாத சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கண்களும் கைகளும் கட்டப்பட்ட நிலையில் அந்தச் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

கடத்தல்கள், காணாமல் போதல் மற்றும் அறவிடுதல் தொடர்பாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகி வருகின்றன. நம்மைச் சுற்றி நடக்கும் கொடூரமான செயற்பாடுகள் இவை.

வடக்குக் கிழக்கில் கடத்தல்சம்பவங்களை நாம் கேட்டு வருகின்றோம். வன்முறைகளும் எதிர்வன்முறைகளும் நான்கு மதங்களும் கற்பித்திருக்கும் மனிதாபிமானத்திற்கு எதிரானது என்றுள்ளது.

(ச-5)

# யுத்த தாங்கிகளுடனான தரைப்படை பயிற்சிகளை முடித்து வெளியேறியது

(யாழ்ப்பாணம்)

இலங்கை இராணுவத்தில் புதிதாக அமைக்கப்பட்ட படைப்பிரிவான யுத்த தாங்கிகளுடனான தரைப்படைப் பிரிவின் மூன்றாவது பட்டாலியன் பயற்சிகளை முடித்துக் கொண்டு வெளியேறியுள்ளது.

இந்த படைப்பிரிவினர் பயிற்சிகளை முடித்துக் கொண்டு வெளியேறும் நிகழ்வு யாழ்ப்பாணம் இடைக்காடு முகாமில் யாழ் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் தலைமையில் பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் இடம் பெற்றது.

படைப்பிரிவின் பயிற்சி நடவடிக்கைகளின் போது திறமைகளை வெளிப்படுத்தியவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. தாங்கிகட்டளை பாடநெறியில் முதலாம் இடத்தை லெப்டினன்ட் ஏச்.எம்.பி.பி.ரேமரத்தின பெற்றுக் கொண்டார். தாங்கி கட்டளை ஓட்டுநர் பாடநெறியில் திறமைகாட்டிய கோப்ரல் யு.டி.ஆர்.திலக்கரத்ன,கனரக ஆயுத பயிற்சியில் திறமைகளை வெளிப்படுத்திய சிப்பாய் கே.ஜயசேகர ஆகியோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

மேஜர் ஜெனரல் டி.ஏ.ராஜபக்ஷ ஆயுதப் படைகளின் கட்டளைத் தளபதி உட்பட இராணுவ உயர் அதிகாரிகள் பலர் இந்த யுத்த தாங்கிகளுடனான தரைப்படைப்பிரிவின் வெளியேற்ற நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.(ச-5)

## நோர்வே தூதுக்குழுவினருடன்...

ஜெனீவாவில் நடைபெற்ற 93 ஆவது சர்வதேச தொழிலாளர் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த 13 ஆம் திகதி ஜெனீவா பயணமானார்.

அங்கு சென்ற ஜனாதிபதி நேற்று அம் மாநாட்டில் ஆரம்ப உரை நிகழ்த்தினார். இந் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக ஜெனீவா சென்றிருந்த நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல் ஹெய்ம் மற்றும் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் ஆகியோரை விசேடமாக ஜனாதிபதி சந்தித்து கலந்துரையாடினார்.

இச் சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.நோர்வே தூதுவருடனான சந்திப்பில் இலங்கையில் இடம் பெற்று வரும் வன்முறைச் சம்பவங்கள் குறித்து விரிவாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விளக்கியதாக தெரிவிக்கப்பட்டது.

சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்ற இச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து உத்தியோக பூர்வமாக எந்த தகவல்களும் வெளியாகவில்லை. எனினும் எதிர்வரும் 25,26 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்திற்கு முன்பாக இடம் பெற்ற இச் சந்திப்பில் பல்வேறு முக்கிய விடயங்கள் பேசப்பட்டிருக்கலாம் என ஆய்வாளர்கள் தெரிவித்தனர். (ச)

## அரசு-புலிகளை...

ஹெய்ம் நோர்வேயின் இலங் கைக்கான விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி ராஜாங்க செயலர் றிச்சட் பௌச்சர், யப்பான் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி மற்றும் ஐரோப்பிய ஒன்றி யப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக் கூட்டத்தில் இலங்கையில் அதிகரித் துச்செல்லும் வன்முறைகள், மனித உரிமை மீறல்கள் மற்றும் அதற்கான காரணங்கள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளது.

தமிழீழ விடுத லைப்புலிகளையும் அரசாங்கத்தையும் மீண்டு பேச்சுவார்த் தை மேசைக்கு கொண்டு வருவதற்கு உள்ள சாத்தியமான வழி வகைகள் குறித்தும் இணைத் தலைமை நாடுகள் விவாதிக்க வுள்ளதாக தெரிகின்றது. மேலும் இடம் பெயர்ந்துள்ள மக்க ளின் பிரச்சினைகள், மீள் குடியமர்த்தல் மற்றும் ஏனைய மனி தாபி மானப் பணிகள் குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளன. (ச)

## முஸ்லிம்கள் அரசாங்கத்துடன்...

சிதைப்பதற்கான முயற்சியே இவ் வதந்தியின் நோக்கமாகும்.

முஸ்லிம் வர்த்தகர்கள் கடத்தப்பட்டு கப் பம் பெறப்படுவதாகவும் இது தொடர்பில் அர சாங்கத்தி லுள்ள முஸ்லிம் அமைச்சர்களும் முக்கியஸ்தர்களும் எதுவும் பேசாமல் மௌனமாக இருப்பதாகவும் ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளதோடு இது தொடர்பான உரிய நடவடிக்கை களை இரு வாரங்களுக்குள் அரசாங்கம் எடுக்காவிட்டால் முஸ்லிம் அமைச்சர்கள் தமது பதவிகளிலிருந்து விலக வேண்டுமெனவும் அவர் சவால் விடுத்திருந்தார்.

இவ்வாறு பதவி விலக வேண்டுமென்றால் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பி னர்கள் அரசியலையே நினைத்துப் பார்க்க முடியாது. வர்த்தகர்கள் 11 பேர் கடத்தப்பட்ட தாக கூறப்பட்டது.

ஆனால் அவை தொடர்பில் பொலிஸ் மற்றும் இரகசிய புலனாய்வு அதிகாரிகள் கடத்தப்பட்டதாக கூறப்படும் நபர்களை விசாரித்த போது அவ்வாறான சம்பவங்கள் எவையும் இடம் பெறவில்லை என்றும் தம்மிடம் யாரும் கப்பம் பெறவில்லை என்றும் குறித்த நபர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆக கடத்தப்பட்டதாக கூறப்படுபவர்களே தமக்கு அவ்வாறு எதுவும் நிகழவில்லையென சொல்லும் போது இந்த ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எந்த ஆதாரத் தின் அடிப்படையில் இவ்வாறு கூறுகின்றார் கள் என தெரியவில்லை.

முஸ்லிம்கள் பற்றி பேசுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு எவ்வித தகுதிகளும் இல் லை. இவர்களின் ஆட்சிக் காலத்தின் போது தான் வடக்கிலிருந்து ஒரு லட்சத்துக்கும் அதி கமான முஸ்லிம் மக்கள் தமது சொந்த இடங் களை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

அப்போது இவர்கள் என்ன செய்தார்கள் எதுவுமில்லை! மகிந்த அரச தலைவரானால், முஸ்லிம்களின் பள்ளிவாசல்களில் பாங்கு சொல்ல முடியாது, மக்காவுக்கு ஹஜ் செல்ல முடியாது. முஸ்லிம்கள் நிம்மதியாக வாழ முடியாது என்றெல்லாம் தேர்தல் காலங்க ளில் பொய்ப் பிரசாரம் செய்து இந்த ஆட்சியை தடுக்க முயன்ற ஐக்கிய தேசியக் கட்சியினர் அதில் தோற்றுப் போன பின்னர் இப் போது முஸ்லிம் வர்த்தகர்கள் கடத்தப்படுவதாகக் கூறி முஸ்லிம் மக்களை இந்த அர சாங்கத்துக்கு எதிராக திசை திருப்பப் பார்க்கின்றனர். அது ஒருபோதும் சாத்தியமாகாது. இந்த அரசாங்கத்துடன் முஸ்லிம் மக்கள் மிகவும் நெருக்கமாகவுள்ளனர் என்றார்.(ச-5)

## இலங்கைக்கு...

கோத்தபாயாவின் பயணத்தின் போது பல படைத்துறை ஆயுதங்களின் பட்டியலை இந்தியாவின் பாதுகாப்பு தரப்புக்கு இலங்கை அனுப்பி வைத்திருந்தது என அந்த இராஜதந்திரி மேலும் தெரிவித்தார்.எனினும் இந்தியா தாக்குதல் ஆயுதங்களை தர மறுத்தால் திட்டமிட்டபடி சீனா மற்றும் பாகிஸ்தானிடம் இருந்தே ஆயுதங்களை கொள்வனவு செய்யும் என உயர் அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த சில வாரங்களாக இந்தியாவின் விமானங்கள் பலமுறை குறிப்பிட்ட பல ஆயுதங்களை ஏற்றியவாறு பண்டாரநாயக்கா விமான நிலையத்திற்கு வருகை தந்ததாக அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்தியா பல ராடர் உபகரணங்களையும் இலங்கைக்கு வழங்கியுள்ளது. (ச-5)

## மனித உரிமை...

ஊடகவியலாளர் மாநாட்டில் தமது கூட்டறிக்கையை வெளியிட்டனர்.

மனித உரிமை மீறல்களை குறைப்பதற் கும் தடுப்பதற்கும் அரசு உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத் தும் இந்த அறிக்கை ,மனித உரிமை மீறல் கள் தொடர்ந்தால் உலகில் மிக மோசமான நாடாக இலங்கை மாற்றம் பெறும் எனவும் எச்சரித்துள்ளது.

கொழும்பிலிருந்து தமிழர்கள் விரட்டியடிப் பதற்கு அரசு மன்னிப்புக் கோரியதை வர வேற்றுள்ள மதத் தலைவர்கள் இருப்பினும் இந்தப் பிரச்சினை இதுவரை சுமுகமாகத் தீர்க்கப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட் டியுள்ளனர்.

இனப் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு உகந்தது அல்ல எனவும் அப்பாவிப் பொது மக்களின் இடம்பெயர்வுகள், கடத்தல்கள், கொலைகள் என்பன தமக்கு ஆழ்ந்த கவலையைத் தருவதாகவும் நான்கு மதத் தலைவர் களும் விடுத்த கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ச-5)

## இலங்கை இனப்பிரச்சினையில்...

படையினரால் துன்புறுத் தப்படுவதையும் மனித உரிமைகள் மீறப்படு வதையும் கண்டித்து வருகின் றன.

கொழும்பில் நூற்றுக்கணக்கான தமிழர் களை துப்பாக்கி முனையில் இராணுவமும் பொலிஸாரும் தமிழர் பகுதிகளுக்கு கடத்தி யுள்ளன. இதனை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உணரத் தொடங்கியுள்ளன.இந்திய அரசு காலம் கடந்த போதிலும் இந்த உண் மையை உணர்ந்து செயற்பட வேண்டும். இலங்கைப் பிரச்சினையில் இந் தியா தனது அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

ஈழத் தமிழர்கள் மனித உரிமை, அரசியல் உரிமை [illegible] வாழவேண்டுமென இந்தியா விரும்பினால் அதற்கு ஒரே தீர்வு. தமிழர் பகு தியில் தமிழர்கள் சுய அரசியல் அதிகாரத்துடன் வாழவேண்டும். இதைத்தவிர வேறு தீர்வு தெரிய வில்லை.

பாலஸ்தீனத்தில் கூட இதுதான் நடந்துள் ளது. இஸ்ரேல் நாட்டுக்குள் பாலஸ்தீனர் தனி நாடாக வாழ்ந்து வருகின்றனர். இதை உலகமும் இந்தியாவும் அங்கீகரித்துள்ளன. இதே கோணத்தில் இந்தியா தனது முயற்சி களை மேற்கொள்ளவேண்டும். தனி ஈழம் தான் இப்பிரச்சினைக்கு தீர்வு.

இலங்கையின் இறையாண்மையை பற் றிக் கவலைப்படும் கட்சிகள் இதைப் பற்றி சிந்தித்து குரல் கொடுக்க முன்வரவேண்டும் என்றார். (ச-5)


## ஹற்றன் நஷனல் வங்கி

### அடகுப் பொருட்களை ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 15/04/2006 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுப் பொருட்கள் 23/06/2007 சனிக்கிழமை, அன்று யாழ்ப்பாணக்கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருட்களை உடனே மீட்க முடியாவிட்டால்,

- கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி

அல்லது

- தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன்தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப்பொருட்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

-முகாமையாளர்

(C-168)



## ST.JOHN'S COLLEGE JAFFNA

## ANNUAL PRIZE GIVING- 2007

**Saturday 23rd June 2007**
**at 10.00 a.m**

**Chief Guest**

**Prof. P. Balasundarampillai**

*B.A.Hons.(Ceylon),Ph.D.(Durham)*

***Emeritus Senior Professor of Geography***

***Former Vice Chancellor***

***University of Jaffna***

**&**

**Mrs Rajalakshmi Balasundarampillai**

*B.A.Hons.(Ceylon),P.G.D.E. (Jaffna)*

**Chairman**

**Ven S. P. Nesakumar**

Archdeacon of Jaffna

Parents, Old Boys & Well-wishers
are cordially invited

(C-169) **Principal,Staff & Students**



## ஆத்ம சாந்தி அழைப்பு

தோற்றம் 1946 01 31



மறைவு 2007 05 17

**அமரர் இராசநாயகம் சாந்தநாயகி**

"உயிர்ப்பும் உயிரும் நானே உயிர்
வாழ்கையில் என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்" -இயேசு

2007.05.17 அன்று ஆண்டவன் அரவணைப்பைப் பெற்ற திருமதி இராசநாயகம் சாந்தநாயகி அவர்களின் ஆன்ம சாந்திப் பூசை கோப்பாய் வீதியிலுள்ள அன்னை திரேசா மடத்தில் இன்று காலை 7.00 மணிக்கு நடைபெறும்.

நண்பகல் அன்னாரின் வீட்டில் (55/54 இந்துக்கல்லூரி வீதி, நீராவியடி) வழங்கப்படும் மதிய போசனத்தில் சகலரையும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

55/54 இந்துக்கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர்


...வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.06.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.